[3rd April 1965

மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து, எல்லா இனங்களிலும் திட்ட இலக்கைவிடச் சாதனை பெருகியுள்ளதை அறியலாம். தரமான தென்னங்கன்றுகள் வேண்டிப் பெருகி வரும் தேவைப் பூர்த்தி செய்ய தென்னங்கன்று வளர்ப்பிடங்கள் பத்திலிருந்து பதினைந்தாக அதிகரிக்கப்பட்டுள்ளன. நல்ல தரமான தென்னை நெற்றுகளைச் சேகரிப்பதற்குத் தனியாரை எதிர்பார்க்க வேண்டியுள்ளது. இதைத் தவிர்ப்பதற்குக் கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை நெற்றுப் பண்ணை ஒன்றைத் தொடங்குவதற்கான திட்டமும் அனுமதிக்கப்பட்டுள்ளது. தீவிரச் சாகுபடி முறை மூலம் (package approved) தென்னை உற்பத்திப் பெருக்கத்திற்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் 1,000 ஏக்கர் பரப்புள்ள நிலத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர்; இத் தீவிரச் சாகுபடித் திட்டம் இப் பகுதியில் 1963-64-ல் நிறைவேற்றப்பட்டது. கடன் வசதிகள் ஏற்படுத்தித் தருவதும் நவீன வேளாண்மை முறைகளை மேற்கொள்வதும் இத்திட்டத்தின் சிறப்பான அம்சங்களாகும். பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்களும் உரங்களும் ஒரு ஏக்கருக்கு குறைவாக உடையவர்களுக்கு இலவசமாகவும் ஒரு ஏக்கருக்கு மேல் ஐந்து ஏக்கருக்குள் நிலம் சொந்தமாக உடையவர்களுக்கு 50 சதவீத விலைக்கும், ஐந்து ஏக்கருக்கு மேல் உள்ளவர்களுக்கு முழு விலைக்கும் வழங்கப்படுகின்றன. சாகுபடிச் செலவிற்காக சிறு தொகை ரொக்கமாகவும் வழங்கப்படுகிறது. 1,000 ஏக்கர் பரப்பு முழுமையும் 1963-64-ல் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டது; அடுத்து வரும் ஆண்டுகளிலும் முழுப் பரப்பும் சாகுபடிக்குக் கொண்டு வரப்படும்.

APPENDIX IV

[*Vide* answer to Unstarred Question No. 78 on page 34 supra.]

(*a*) The quantity of rice distributed by Government during November and December to the people of—

	November. (IN QUINTALS)	December. (IN QUINTALS)
1 Vilavancode Taluk	10,608	18,624
2 Kalkulam ,, ...	10,017	17,495
3 Agasteeswaram ,, ...	1,140	1,560
4 Thovala ,, ...	360	420

(*b*) Nature of supervision and control exercise over the Co-operative Societies which are authorised to distribute rice in Kanyakumari district.

Allotments to the Societies are made by the Collector's Office every week. The administrative surcharge in all cases and the cost of rice in respect of Government rice are directly recovered from the Societies. Only after the remittance of these amounts, the permit issued. This system serves as a check to find out whether the Societies are regularly lifting the stock allotted to them. As soon as the stock reaches the Society, it is got checked by an authorised Government Officer like the Tahsildar, Taluk Supply Officer, Panchayat Union Commissioner, before the stock

3rd April 1965]

is released. The check is to ensure that the allotted stock actually reaches the society concerned. The retail price of rice is being fixed by the Collector's Office. The Societies are required to display boards indicating the retail price and the stock available for distribution everyday. The Panchayat Union Commissioner, Tahsildars, Taluk Supply Officers and the Extension Officer (Co-operative) are checking the actual distribution. Apart from the above check, the District Supply Officer is also conducting surprise checks of these societies.

(*c*) Complaints of irregularity and black marketing by the Societies during November and December 1964.

During November and December 1964, there was no major case of black marketing by any Society. Five complaints regarding some excess collections, closing of societies on working days, etc., were received and they were looked into by the Collector of Kanyakumari. Other cases of late distribution, etc., were also looked into and got rectified by the Collector.

(*d*) Days fixed for the issue of rice to the Co-operative Societies.

Every Monday is fixed for the issue of rice the Societies in all the Municipal towns, Tuesday for the rural areas of Vilavancode taluk, Wednesday for Kalkulam taluk and Thursday for Agasteeswaram and Thovala taluks. The Societies which fail to turn up on these days are to take delivery on Fridays.

(அ) நவம்பர், டிசம்பர் மாதங்களில் அரசாங்கம், கீழ்க்கண்ட தாலுக்கா மக்களுக்கு வழங்கிய அரசியின் அளவு :

			நவம்பர். (குவிண்டலில்)	டிசம்பர். (குவிண்டலில்)
1	விளவங்கோடு தாலுக்கா	..	10,608	18,624
2	கல் குளம் தாலுக்கா	..	10,017	17,495
3	அகஸ்தீஸ்வரம் தாலுக்கா	..	1,140	1,560
4	தோவாளை தாலுக்கா	..	360	420

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி வழங்க அனுமதி பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் மீது செலுத்தப்படுகிற மேற்பார்வை, கண்காணிப்பு இவற்றின் தன்மை :—

மாவட்டக் கலெக்டர் அலுவலகம் ஒவ்வொரு வாரமும் இச் சங்கங்களுக்கு அரிசிப் பங்கீடு செய்கிறது. இவற்றிற்காகும் நிர்வாகச் செலவும், அரசாங்க அரிசியின் விலையும் நேரடியாகச் சங் கங்களிலிருந்து பெறப்படுகின்றன. இந்தத் தொகைகளைச் செலுத் திய பிறகுதான், அரிசிக்கு அனுமதிச் சீட்டு (Permit) வழங் கப்படுகிறது. இந்தச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட சரக்குகளை அவை ஒழுங்காகப் பெற்றுக் கொள்கின்றனவா என்று கண்டுபிடிக்க, இந்த முறை பயன்படுகிறது. சங்கத்திற்குச் சரக்கு வந்ததும், அதை வழங்குவதற்கு முன்பு தாசில்தார், தாலுக்கா சப்ளை அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் போன்ற அரசாங்க அனுமதி பெற்ற அதிகாரி ஒருவரால் அது

சரிபார்க்கப்படுகிறது. ஒதுக்கப்பட்ட அரிசி அந்தந்தச் சங்கத்திற்குப் போய்ச் சேருகிறதா என்பதைப் பார்க்க இவ்வாறு பரிசீலனை செய்யப்படுகிறது. அரிசியின் சில்லரை விலை மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தாரால் குறிக்கப்படுகிறது. சில்லறை விலையையும் ஒவ்வொரு நாளும் வழங்குவதற்காகவுள்ள அரிசி இருப்பையும், பலகையில் எழுதிப்போட வேண்டுமென்று சங்கங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அரிசி வழங்கப்படுவதை பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர், தாசில்தார்கள், தாலுக்கா சப்ளை அதிகாரிகள், (கூட்டுறவு) வளர்ச்சி அதிகாரிகள் முதலியோர் சரிபார்க்கிறார்கள். இப் பரிசீலனை தவிர, மாவட்ட சப்ளை அதிகாரியும் இச்சங்கங்களுக்குச் சென்று திடீர்ச் சோதனை செய்கிறார்.

(உ) 1964 நவம்பர், டிசம்பர் மாதங்களில் சங்கங்களின் ஒழுங்கீனம், கள்ளச் சந்தை வியாபாரம் சம்பந்தமான புகார்கள் :—

1964 நவம்பர், டிசம்பர் மாதங்களில் எந்தச் சங்கத்திலும் கள்ளச் சந்தை வியாபாரம் சம்பந்தமாக பெரிய வழக்கு எதுவும் நேரவில்லை. கூடுதலாகத் தொகை வசூலித்ததாகவும் வேலை நாட்களில் சங்கங்களை மூடியதாகவும் போன்ற ஐந்து புகார்கள் பெறப்பட்டன. அவற்றைக் கன்னியாகுமரி கலெக்டர் கவனித்தார். தாமதமாக அரிசி வழங்கியது போன்ற மற்ற வழக்குகளும் கவனிக்கப்பட்டு சீர்திருத்தப்பட்டன.

(எ) கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரிசி வழங்குவதற்கு நிச்சயிக்கப்பட்ட கிழமைகள் :

நகராட்சி நகரங்கள் அனைத்திலும் திங்கட்கிழமையும், விளவங்கோடு தாலுகா கிராமப் பகுதிகளில் செவ்வாய்க் கிழமையும், கல்குளம் தாலுக்காவில் புதன் கிழமையும், அகஸ்தீஸ்வரம், தோவாளை தாலுகாக்களில் வியாழக் கிழமையும் சங்கங்களுக்கு அரிசி வழங்க நிச்சயிக்கப்பட்டுள்ளன. இந்தக் கிழமைகளில் சரக்கு எடுக்கத் தவறும் சங்கங்கள் வெள்ளிக் கிழமைகளில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS